# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஏழாம் பத்து

## ஐந்தாம் திருவாய்மொழி - கற்பார்
## விஜயங்களுக்கு அடியான விபவாவதார குணங்களை அநுசந்தித்து, 'இந்த குணாநுபவத்தை இழக்கிறார்களே!' என்று உலகத்தாரை நோக்கி ஆழ்வார் இரங்குதல்

** கற்பார் இராம பிரானை அல்லால் * மற்றும் கற்பரோ? *
புற்பா முதலாப் * புல் எறும்பாதி ஒன்று இன்றியே **
நற்பால் அயோத்தியில் வாழும் * சராசரம் முற்றவும் *
நற்பாலுக்கு உய்த்தனன் * நான்முகனார் பெற்ற நாட்டுளே 1

நாட்டில் பிறந்தவர் * நாரணற்கு ஆள் அன்றி ஆவரோ? *
நாட்டில் பிறந்து * படாதன பட்டு மனிசர்க்கா **
நாட்டை நலியும் அரக்கரை * நாடித் தடிந்திட்டு *
நாட்டை அளித்து உய்யச் செய்து * நடந்தமை கேட்டுமே 2

கேட்பார்கள் கேசவன் கீர்த்தி அல்லால் * மற்றும் கேட்பரோ? *
கேட்பார் செவி சுடு * கீழ்மை வசவுகளே வையும் **
சேட்பால் பழம் பகைவன் * சிசுபாலன் * திருவடி
தாட்பால் அடைந்த * தன்மை அறிவாரை அறிந்துமே 3

தன்மை அறிபவர் தாம் * அவற்கு ஆள் அன்றி ஆவரோ? *
பன்மைப் படர் பொருள் * ஆதுமில் பாழ் நெடுங்காலத்து **
நன்மைப் புனல் பண்ணி * நான்முகனைப் பண்ணி தன் உள்ளே *
தொன்மை மயக்கிய தோற்றிய * சூழல்கள் சிந்தித்தே 4

சூழல்கள் சிந்திக்கில் * மாயன் கழல் அன்றிச் சூழ்வரோ? *
ஆழப் பெரும் புனல் தன்னுள் * அழுந்திய ஞாலத்தை **
தாழப்படாமல் * தன் பால் ஒரு கோட்டிடைத் தான் கொண்ட *
கேழல் திரு உரு ஆயிற்றுக் * கேட்டும் உணர்ந்துமே 5

கேட்டும் உணர்ந்தவர் * கேசவற்கு ஆள் அன்றி ஆவரோ? *
வாட்டம் இலா வண் கை * மாவலி வாதிக்க வாதிப்பு உண்டு **
ஈட்டங்கொள் தேவர்கள் * சென்று இரந்தார்க்கு இடர் நீக்கிய *
கோட்டங்கை வாமனனாய்ச் * செய்த கூத்துக்கள் கண்டுமே 6

கண்டும் தெளிந்தும் கற்றார் * கண்ணற்கு ஆள் அன்றி ஆவரோ? *
வண்டுண் மலர்த்தொங்கல் * மார்க்கண்டேயனுக்கு வாழு நாள் **
இண்டைச் சடை முடி * ஈசன் உடன் கொண்டு உசாச் செல்ல *
கொண்டங்குத் தன்னொடும் கொண்டு * உடன் சென்றது உணர்ந்துமே 7

செல்ல உணர்ந்தவர் * செல்வன் தன் சீர் அன்றிக் கற்பரோ? *
எல்லை இலாத பெரும் தவத்தால் * பல செய் மிறை **
அல்லல் அமரரைச் செய்யும் * இரணியன் ஆகத்தை *
மல்லல் அரி உருவாய்ச் * செய்த மாயம் அறிந்துமே 8

மாயம் அறிபவர் * மாயவற்கு ஆள் அன்றி ஆவரோ? *
தாயம் செறும் ஒரு நூற்றுவர் மங்க * ஓர் ஐவர்க்காய் **
தேசம் அறிய ஓர் சாரதியாய்ச் சென்று * சேனையை
நாசம் செய்திட்டு * நடந்த நல் வார்த்தை அறிந்துமே 9

** வார்த்தை அறிபவர் * மாயவற்கு ஆள் அன்றி ஆவரோ? *
போர்த்த பிறப்பொடு நோயோடு மூப்பொடு * இறப்பு இவை
பேர்த்து ** பெருந்துன்பம் வேர் அற நீக்கித் * தன் தாளின் கீழ்ச்
சேர்த்து * அவன் செய்யும் * சேமத்தை எண்ணித் தெளிவுற்றே 10

** தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு * இன்பக் கதி செய்யும் *
தெளிவுற்ற கண்ணனைத் * தென்குருகூர்ச் சடகோபன் சொல் **
தெளிவுற்ற ஆயிரத்துள் * இவை பத்தும் வல்லார் அவர் *
தெளிவு உற்ற சிந்தையர் * பா மரு மூவுலகத்து உள்ளே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---